பக்கங்கள் 21

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை 13.12.2024 | அதிர்வு 133

## சஜித் மீது திஸ்ஸ அதிருப்தி?




### கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டுமாம்

“நாடாளுமன்றத்தில்பிரதானஎதிர்க்கட்சி யாகச் செயற்படும் ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் மறுசீரமைக்கப்பட 06

# எலிக்காய்ச்சல் தொற்றை நேரில் ஆராய வடக்குக்கு வந்தது வைத்திய நிபுணர்

## யாழ். போதனா, பருத்தித்துறை வைத்தியசாலைகளுக்கு விஜயம்





(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் எலிக் காய்ச்சல் காரணமாக இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில், கள நிலைமைகளை ஆராயும் நோக்கில் கொழும்பிலிருந்து சுகா தார அமைச்சின் தொற்றுநோயி யல் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் குழு ஒன்று யாழ்ப்பாணத் துக்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் செய்து ஆய்வு நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளது.

முதலில் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலைக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவைச் சேர்ந்த வைத் தியர் நிபுணர் பிரபா அபயக் கோன் தலைமையிலான குழு வினர், காய்ச்சல் காரணமாக அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ள நோயாளர்களைப்பார்வை யிட்டதுடன் அங்கு ஆய்வு நடவடிக் கைளிலும் ஈடுபட்டனர்.

அதேவேளை, அவர்கள், யாழ். போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, பொது வைத் திய நிபுணர் த.பேரானந்தராஜா உள்ளிட்டவர்களுடன் தற்போ தைய நிலைமை தொடர்பில் கலந் துரையாடலிலும் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் பிற்பகல் வேளையில் அவர்கள், பருத்தித் துறை ஆதார வைத்தியசா லைக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள் ளப் பெருக்கைத் தொடர்ந்து காய்ச்சல் காரணமாக அதிகள வான நோயாளர்கள் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர். 06

# பருத்தித்துறை வைத்தியசாலையில் மேலும் பலர் எலிக்காய்ச்சல் வைரஸ் அறிகுறிகளுடன் அனுமதி



எலிக்காய்ச்சல் வைரஸ் அறிகுறி களுடன் மேலும் 14 பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியலையில் நேற்று சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதத்தில் எலிக் காய்ச்சல் வைரஸ் அறிகுறிகளுடன் 5 பேர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர் களில் ஒருவர் கடந்த வாரம் 06



வைத்திய மாணிகள், அரை வைத்தியர்கள் எல்லாம் ‘வைத் திய கலாநிதி கள்’ என்று அழைக்கப்படு வது குறித்து என் பத்தியில் நேற்று பிரஸ்தாபித்திருந்தேன்.

அதை வாசித்து விட்டு இலங்கை நண்பர்கள், பிரமுகர்கள், உண்மை யாகப் பல்கலைக்கழகங்கள் மூலம் கற்றுத்தேறி ‘கலாநிதி’ பட்டம் 06

# அதிவேக நெடுஞ்சாலை கோர விபத்தில் சிறுமிகளான இரு சகோதரிகள் மரணம்!

## தந்தை, தாய் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

தெற்கு அதிவேக வீதியின் பின்ன துவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு சிறுமிகள் பலியாகியுள்ளனர்.

12 வயதான அக்காவும், 10 வயதான தங்கையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கொட்டாவ பகுதியிலிருந்து பாலடுவ நோக்கிப் பயணித்த கார், லொறியின் பின்னால் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கமே விபத்துக்கான காரணமாகும் எனக் கூறப்படுகின்றது.



விபத்தில் காரில் பயணித்த சிறுமிகளின் தாய், தந்தை படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை – நுபே பகுதியை சேர்ந்தவர்களே விபத்துக்குள்ளாகியுள்ளனர்.




### யாழ். வடமராட்சியில்

# தனிமையில் வசித்து வந்த வயோதிபர் சடலமாக மீட்பு!

யாழ். வடமராட்சி, அல்வாய் மேற்கு – ஆண்டாள் தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை (வயது 86) என்ற வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் தனிமையில் வசித்து வந்த நிலையில் நேற்றுக் காலையில் இருந்து கூக்குரல் இட்டவாறு இருந்துள்ளார்.

பின்னர் சத்தம் கேட்காது இருந்த நிலையில் அயலவர்களால் கிராம அலுவலர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அவர்கள் அங்கு சென்று பார்த்த போது மேற்படி வயோதிபர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு நேற்று இரவு சென்ற பருத்தித்துறை பதில் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணை செய்து உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிப்பு



வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை கலாசார மண்டபத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறியின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டிருந்தார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இலச்சுமணன் இளங்கோவனும், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) இ.நளாஜினி, யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கந்தையா பகீரதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து அதிதிகளின் உரைகளுடன், விவசாய எண்ணக் கருக்களை வெளிப்படுத்தும் வகையில் நடன நிகழ்வுகளும் நடைபெற்றன.

ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மாகாண, மாவட்ட மட்டங்களில் வெற்றி பெற்ற சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மாகாண மட்டத்தில் 17 விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களும், மாவட்ட மட்டத்தில் 15 பண்ணையாளர்களும் 61 விவசாயிகளும் இவ்வாறு கௌரவிக் கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாகாண மட்ட வெற்றியாளர்களின் அனுபவப் பகிர்வுகளும் நடைபெற்றன.

மேலும், இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கலாண்டு இதழான "அறுவடை" இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அதிகாரிகள், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## பொதுஜன பெரமுன அறிவிப்பு



சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வர தீர்மானித்துள்ளதாகப் பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சபாநாயகர் கலாநிதி பட்டம் மற்றும் பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ளதாகக் காட்டி மக்களை ஏமாற்றியுள்ளார்.

எனவே சபாநாயகர் கல்வித் தகைமையைக் காட்டி மக்களை ஏமாற்றியிருந்தால் அவர் பதவி விலக வேண்டும்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றக் குழுவின் ஊடாக சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இதற்கு முழு எதிர்க்கட்சியினரும், அரசாங்கத்தின் மனசாட்சியுள்ள உறுப்பினர்களும் ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.” – என்றார்.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு ஸ்ரீ பவானந்தராசா எம்.பி. திடீர் விஜயம்





மர்ம காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களை நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் எஸ். ஸ்ரீபவானந்தராசா நேற்று நேரில்சென்று பார்வையிட்டார்.

வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட அவர், சுகாதார அதிகாரிகள் வைத்திய அதிகாரிகள் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

மேலதிக விடயங்கள் மற்றும் மேலதிக ஆளணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், அங்குள்ள ஒரு விடுதியை காய்ச்சலுக்காக மட்டும் பயன்படுத்த ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களிற்கு அமைய செயற்படுமாறும் அவர் தெரிவித்தார்.

# கடலட்டை வளர்ப்பு பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்துவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

## அன்னலிங்கம் அன்னராசா தெரிவிப்பு




"கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வினை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்துவது வடமாகாண மீனவர்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது."

–இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அன்னலிங்கம் அன்னராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தில் கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வினை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்துவது வடமாகாண மீனவர்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். மாவட்ட செயலாளர் ம. பிரதீபனின் இந்த அறிவிப்பு தொடர்பில் வடக்கு மாகாணத்தில் உள்ள நான்கு மாவட்ட மீனவர் அமைப்புகள் ஒன்று கூடி கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த கருத்துகளை முன்வைக்கின்றேன்.

வடக்கு மாகாண பாரம்பரிய மீனவர்களது வாழ்வாதாரத்தை அழிக்கும் கடலட்டை பண்ணையை தடுத்து நிறுத்த கோரி யாழ்ப்பாண மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாண ரீதியாகவும் பல்வேறு போராட்டங்களை செய்தும் அக்கோரிக்கை அடங்கிய மகஜர்களை வழங்கியும் உள்ளோம். வடக்கு கடற்றொழில் சமூகத்தின் அக்கோரிக்கைக்கு செவிசாய்த்து பதிலளிக்காத நிலையில், இன்று கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வை நடத்துவது எந்தவித்தில் நியாயம்?

இலங்கையில் கடலட்டை பண்ணை தொடர்பில் விஞ்ஞான ரீதியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சூழலுக்கு பாதிப்பு இல்லை என்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதா என்பதனை மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெளிவுபடுத்த வேண்டும்.

கடலட்டை பண்ணைக்கு எதிராக வடக்கு மாகாண கடற்றொழில் சமூகம் தொடர்ச்சியாக குரலெழுப்பி வருகிறது. இது தொடர்பில் விஞ்ஞான ஆய்வு ரீதியாக சூழல் பாதிப்புகள் எதுவும் ஏற்படாது என்பதனை உறுதிப்படுத்தி அனுமதிகளை வழங்குங்கள் என்று கோரி வருகின்ற நிலையில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் அதனை உறுதிப்படுத்தாது செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு இருக்கையில் சமூத்திரவியல் பல்கலைக் கழகத்தில் கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்த மாவட்ட செயலாளர் கூடிய கவனம் செலுத்துவதன் ஊடாக இதனை ஒரு சாதனையாக காட்ட முற்படுகின்றாரா என்ற சந்தேகத்தை கடற்றொழில் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

பாரம்பிரிய சிறு கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில் அதற்கு தீர்வினை காண எவ்வித முயற்சியும் எடுக்காத மாவட்ட செயலாளர் எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் கடலட்டை வளர்ப்பு பயிற்சி மேற்கொண்ட மாணவர்களை கௌரவிக்க முற்படுவது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாளைய (இன்று) நிகழ்வுக்கு முன்னதாக, ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளின் அனுமதி தொடர்பான உறுதிப்படுத்தல்களையும், கடலட்டை பண்ணை தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆய்வு முடிவுகளை வெளியிட்டு தெளிவுபடுத்த வேண்டும் என மாவட்ட செயலாளர் ம. பிரதீபனிடம் வடமாகாண கடற்றொழிலாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். அதேநேரம் மாவட்ட செயலாளர் அவ்வாறு செயற்படாது நிகழ்வை நடாத்துவாராயின் வடமாகாண கடற்றொழிலாளர் சமூகம் மீண்டும் ஒன்றுகூடி அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுப்போம்."– என்றார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

பெற்றவர்கள் எனப் பலர் வட்ஸ் அப்பில் அழைப்பு எடுத்துப் பேசினார்கள்.

நான் எழுதியவை குறித்து அவர்கள் சிலாகித்தாலும் ஒரு விடயம் குறித்து எல்லோரும் என் மீது குறை சொன்னார்கள்.

பணம் கொடுத்து பல அநாமேதயப் பல்கலைக்கழகங்களின் பெயரில் கௌரவ கலாநிதிப் பட்டங்களை விலைக்கு வாங்கிக் கொண்டு, தங்களைக் 'கலாநிதிகள்' என அழைத்துக் கொள்ளும் கல்லாநிதிகள் குறித்து நான் எதுவும் கூறவில்லை என்பதே அவர்கள் குறைபட்டுக் கொண்ட விடயம். அத்தகைய கல்லாநிதிகள் சிலரின் பெயர்களை குறிப்பிட்டு கூறவும் அவர்கள் தவறவில்லை. தமிழர் அரசியலில் திருகுதாளம் பண்ணிக் கொண்டிருக்கும் கனடாப் பேர்வழி ஒருவரின் பெயரை அவர்களில் பலர் குறிப்பிடத் தவறவில்லை. உயர்தரம் கூடப் படிக்காமல் கலாநிதி என்று தம்மை அழைத்துக் கொள்ளும் மோசடிக்காரப் பிரகிருதிகள் குறித்து அரசாங்கமும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவும் நடவடிக்கை எடுக்காமல் பார்த்திருப்பது குறித்து அவர்களில் பலரும் விசனம் தெரிவித்தனர்.

அவை பற்றி எல்லாம் விரிவாக ஒரு நாள் எழுதுவேன் என்று கூறி அவர்களைச் சமாளித்தேன். இன்னொரு நாள் ஆறுதலாக அவற்றைப் பார்ப்போம்.

* * *

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நாள. வவுனியாவில். நிச்சயம் திருவிழாவாக இருக்கும்.

நிர்வாக செயலாளரின் கீழ் இயங்கும் ஆளணி பழைய ஏற்பாடுகளின் படியே சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பியின் அனுப்புபவர் முகவரி இடப்பட்ட இறப்பர் ஸ்டாம்புடன், நாடாளுமன்ற முத்திரைகளைப் பயன்படுத்தி கூட்ட அறிவித்தலை அனுப்பியமையால் ஒரு சிக்கல்.

தலைமைப் பதவி உட்பட கட்சியின் அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் தாம் ராஜினாமாச் செய்கின்றார் என்று தெரிவித்து மாவை சேனாதிராஜா எழுதிய கடிதத்தைத் தாம் உரிய நடவடிக்கைக்காக ஏற்றுக் கொண்டு விட்டார் எனக் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பி., மாவை சேனாதிராஜாவுக்கு எழுத்து மூலம் பதிவுத்தபாலில் கடிதம் அனுப்பிய பின்னரும், மத்திய குழுக் கூட்டத்துக்கு மாவை சேனாதிராஜாவுக்கு கட்சியின் நிர்வாகச் செயலாளர் கூட்ட அறிவித்தல் கடிதத்தை அனுப்பி இருக்கின்றமையால் கட்சிக்குள் சிறிது குழப்பம் என்று தெரிகிறது.

பொதுச் செயலாளரின் பதிவுத்தபால்கள் எல்லாம் கிடைத்த பின்னர், தனது பதவி விலகல் கடிதத்தைத் தாம் விலக்கிக் கொள்கின்றார் என்று தெரிவித்து, கடந்த மூன்றாம் திகதியிட்டு மாவை சேனாதிராஜா ஒப்பமிட்ட கடிதம் ஒன்று சிறிதரன் எம்.பியினால் பொதுச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாக அறிய வந்தது.

மாவை சேனாதிராஜாவின் ராஜினாமாக் கடிதத்திற்கு ஒரு தீர்வு கண்ட பின்னரே நாளைய மத்திய குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் ஒரே நாளில் மூன்று விதமான நிலைப்பாட்டை எடுத்தவர் மாவை சேனாதிராஜா. காலையில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் கட்சியின் நிலைப்பாட்டை வவுனியாவில் வைத்து ஊடகங்களுக்கு அறிவித்தார் அவர். அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் கிளிநொச்சியில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவாகப் பொதுக்கூட்ட மேடையில் ஏறிப் பேசினார். பின்னர் ரணிலுக்கான ஆதரவையும் வெளிப்படுத்தியவர்.

இவ்விடயங்களை ஒட்டி கட்சி அவரிடம் விளக்கம் கோரியுள்ளது. வயதாலும் அவர் தளந்து போய் இருக்கின்றார். நாளைய கூட்ட விவாதங்களில் இந்த விடயங்கள் கணக்கெடுக்கப்படும் என்று தெரிகின்றது. போட்டுப் பிடிக்கப் பலர் காத்திருக்கின்றனர் என்ற ஒரு தகவலும் உண்டு.

* * *

தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசினால் அனில் ஜாசிங்க சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டமை பல தரப்புகளிலும் – குறிப்பாக முஸ்லிம்களின் தரப்பில் – பெரும் அதிருப்தி அலைகளை ஏற்படுத்திருப்பதாகத் தெரிகிறது.

கொவிட் காலத்தில் அத்தொற்றினால் உயிரிழந்த இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் ஜனாஸாக்களையும் பூதவுடல்களையும் கட்டாயம் எரித்தாக வேண்டும் என்ற சுகாதார விதிமுறை வலிந்து திணிக்கப்பட்ட சமயத்தில், சுகாதார அமைச்சில் முக்கிய பதவி நிலையில் இருந்து, அந்த விதிமுறையை கட்டாயமாக நடைமுறைப்படுத்துவதில் தீவிரப் பங்காற்றியவர் இந்த ஜாசிங்க என்ற ஒரு கருத்து நிலைப்பாடு உள்ளது.

"கொவிற்றால் உயிரிழந்தவர்கள் கட்டாயம் தகனம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியவர் எனக் கூறப்படும் ஒருவரை சுகாதார அமைச்சின் செயலாளராக நியமித்தமை நியாயமான வெறுப்பை ஏற்படுத்துகின்றது. இலங்கையர்களுக்கு நீதி மற்றும் நல்லெண்ணத்தை உறுதி செய்வதற்காக இந்த நியமன முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள்" – என்ற சாரப்பட 'இலங்கை வாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பின்' சார்பில் ராஜ் சிவநாதன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கு ஒரு கடிதம் அனுப்பி உள்ளார்.

ஆளும் தரப்பின் பிரதிபலிப்பை எதிர்பார்த்து மக்கள் காத்திருக்கின்றனர்.

---

**பருத்தித்துறை...**

உயிரிழந்துள்ளார். டிசம்பர் மாதத்தில் நேற்று வரையில் 58 பேர் எலிக்காய்ச்சல் வைரஸ் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும், மூவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவிலும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எலிக்காய்ச்சல் வைரஸ் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டிருந்த நோயாளர்களில் சிலர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று இரவு 8 மணி வரையான நிலவரத்தின் அடிப்படையில் 39 பேர் எலிக்காய்ச்சல் வைரஸ் அறிகுறிகளுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

---

**எலிக்காய்ச்சல்...**

இந்நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேற்றுப் பிற்பகல் விஜயம் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் குழுவினர், வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிலைமைகளை ஆராய்ந்ததுடன், அங்குள்ள நோயாளர்களையும் பார்வையிட்டனர்.

மேற்படி குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை நோய்த் தொற்று ஏற்பட்ட இடங்களுக்கும் கள விஜயம் மேற்கொண்டு ஆராயவுள்ளனர்.

---

**சஜித் மீது...**

வேண்டும். அவ்வாறு அல்லாவிட்டால் தற்போதைய பலமான அரசுடன் அரசியல் ரீதியில் மோதுவதென்பது பெரும் சவாலாகவே அமையும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கை விரைவில் இடம்பெறவேண்டும். இதனை வலியுறுத்தும் வகையிலேயே கடந்த தேர்தல் முடிவுகள் அமைந்தன. எனவே, மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றம் இடம்பெறவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அவ்வாறு நடக்க வேண்டும் என நானும் வலியுறுத்துகின்றேன். புதிய மாற்றமொன்றை நாம் மக்களுக்கு காட்டியாக வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதுள்ள அரசுடன் அரசியல் சமரில் வெல்வது சவாலாக அமையும்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணி உடைவதை நாம் விரும்பவில்லை. அதனால்தான் கலந்துரையாடல் மூலம் தேசியப்பட்டியல் பிரச்சினையைத் தீர்த்தோம்." – என்றார்.



# நிதிக் கட்டமைப்பை செயல்திறன் மிக்கதாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்

நாட்டின் நிதிக் கட்டமைப்பை பலப்படுத்தி, செயல்திறன் மிக்கதாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு அறிவுறுத்தினார்.

நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த, சுயாதீன நிறுவனம் என்ற வகையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும், அதற்கான ஒத்துழைப்பு மற்றும் வசதிகளை அரசாங்கம் வழங்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் நிதிச் செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக்குவதற்கு நல்லதொரு பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



பொருளாதாரம் மற்றும் நிதிக் கட்டமைப்புக்களின் முழுமையான முன்னேற்றங்களை நெருக்கமாக ஆராய்ந்த பின்னர், மத்திய வங்கியினால் நிதி ஸ்திரமாக்கல் மற்றும் நிதிக் கட்டமைப்பின் ஈடுகொடுக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி, நிதிக் கட்டமைப்பில் தற்போதுள்ள பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளை அமுல்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

பொருளாதாரம் நிலைப்படுத்தப்பட்டவுடன் சொத்துக்களின் தரநிலையில் பாதுகாப்பான முன்னேற்றம் மற்றும் முன்மதியின் அடிப்படையில் அவதானத்தை முகாமைத்துவம் செய்துகொண்டு மூலதனத்தை கட்டியெழுப்புவதன் ஊடாக நிதி கட்டமைப்பில் சாதகமான செயல்திறன் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்சன சூரியப்பெரும, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தீர்ப்புகள் தரும் பாடம்

இலங்கையின் நீதி, நிர்வாக முறைமைகள் தொடர்பில் இரண்டு முக்கிய தீர்ப்புகளை உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கின்றது.

ஒன்று - அரசமைப்புகவுன்ஸில்தொடர்பான தீர்ப்பு. அடுத்தது - பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பெயரால் அதிகாரத் தரப்பு முன்னெடுத்த அடாவடித்தனத்தை அம்பலப்படுத்தி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

இரண்டு தீர்ப்புகளுமே இழைக்கப்பட்ட தவறுகள், அநீதிகளுக்கு பரிகாரங்களைத் தரும் தீர்ப்புகளாக இருந்தாலும், அவை இரண்டுக்கும் உட்கிடையாக இலங்கையின் நீதி முறைமையில் பரிகாரம் காணப்படாத ஒரு விடயம் தொக்கி நிற்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதும் அவதானிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

அது - இலங்கையின் நீதி பரிபாலன முறைமையை ஒரு பாரிய சீர்திருத்தத்திற்கு - முறைமைமாற்றத்திற்கு - உட்படுத்துவது மிகவும் அவசியமானது, அத்தியாவசியமானது என்பதுதான்.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்குப் பரிந்துரைத்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய சிபாரிசை முன்னைய அரசமைப்பு கவுன்ஸில் நிராகரித்தமை சட்ட ரீதியானது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்திருக்கின்றது.

இந்த வழக்கின் விசாரணையின் போது எதிர்மனுதாரர்களான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கபீர் காசிம் ஆகிய எதிராளிகள் சார்பில் முன்னிலையாகி வாதிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஒரு விடயத்தை தமது வாதத்தின் இடையே முன் வைத்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரை உயர் நீதிமன்றத்திற்குப் பதவி உயர்த்தும் முடிவை அரசமைப்பு கவுன்ஸிக் வெறுமனே சும்மா நிராகரிக்கவில்லை, ஆழ்ந்த ஆய்வின் பின்னர் தான் அந்த முடிவை முன்னெடுத்தது என்று அவர் குறிப்பிட்டு இருந்தார்.

“ஒரு நீதிபதி ஸீஸரின் மனைவியைப் போன்றவர். ஸீஸரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் என்பது கட்டாயம் என வலியுறுத்தப்படுகிறது. அது போல நீதிபதியும் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும். நீதிபதியின் செயற்பாடு தொடர்பில் சில சந்தேகக் கீறல்கள் ஏற்படுத்தும் சாட்சியங்களே அந்த நீதிபதி மீது பொதுமக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கப் போதுமானவை.” - என்று வாதிட்டிருந்தார் சுமந்திரன்.

அந்த வாதத்தை ஏற்கும் விதத்தில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.

ஆயினும் இப்படி பதவி உயர்வு வழங்கும் வாய்ப்பு நிராகரிக்கப்பட்டமை சரியென தீர்ப்பளிக்கப்பட்ட நீதிபதி - அதாவது மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் - தொடர்ந்தும் அப்பதவியில் இருக்கப் போகிறார் - அதுவும் இந்தத் தீர்ப்புக்குப் பின்னரும்.

சந்தேகக் கீறல் விழுந்த பின்னரும் அவர் பதவியில் தொடர்வதை கட்டுப்படுத்தி, நேர்சீராக்கும் ஒழுங்கு முறை இலங்கையில் சட்ட நீதிமுறைமையில் இல்லை என்பதுதான் உண்மை.

அதுபோலவேதான் முன்னாள் மாகாண ஆளுநர் ஒருவர் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற மிலேச்சத்தனமான - காட்டுமிராண்டித்தனமான - கொடூரமான - குரூரமான - சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை தவறு என்று கண்டு, அந்தத் தவறுக்கு இழப்பீடாக 75 ஆயிரம் ரூபாவை அரசு வழங்க வேண்டும் என்று உத்தர விட்ட உயர் நீதிமன்றம், அந்தத் தவறை இழைத்த எவர் மீதும் தண்டனை நடவடிக்கை எதையும் விதித்து உத்தரவிடவில்லை.

இவையெல்லாம் இலங்கையின் சட்ட, நீதி பரிபாலன முறைமை ஒரு தலைகீழ் சீர்திருத்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றன என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.





# பாகுபாடுகளுக்கு எதிரான போராட்டத்தை தொடர வேண்டும்: முதல்வர் ஸ்டாலின்

"உயர்ந்த சாதி – தாழ்த்தப்பட்ட சாதி, ஏழை – பணக்காரன், ஆண் – பெண் ஆகிய பாகுபாடுகளுக்கு எதிரான நம்முடைய போராட்டத்தை நாம் தொடர வேண்டும். முன்பு இருந்ததை விட வேகமாக செயல்பட வேண்டும்."

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கேரளாவின் வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் போராட்டம் நூற்றாண்டு நிறைவு விழாவில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்னர் அவர் உரையாற்றுகையில்,

"எந்த வைக்கம் நகருக்குள் நுழையக் கூடாது என்று தந்தை பெரியார் தடுக்கப்பட்டாரோ – எந்த வைக்கம் நகரில் கைது செய்யப்பட்டாரோ, அதே வைக்கம் நகரில் இன்று மாபெரும் நினைவகத்தை எழுப்பி, தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளின் சார்பில் மாபெரும் விழாவை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

தந்தை பெரியாருக்கு எதிராக யாகம் நடந்த ஊரில், இன்றைக்கு புகழ்மாலை சூட்டியிருக்கக்கூடிய நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுதான் பெரியாரின் வெற்றி, திராவிட இயக்கத்தின் வெற்றி. அந்த வகையில் சமூக நீதியின் வரலாற்றிலும், இந்த நாள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும். தமிழத்தின் முதல்வர் என்ற பொறுப்புடன் இந்த நினைவகத்தை திறந்து வைப்பதில், எனக்குக் கிடைத்திருக்கிற மிகப் பெரிய வரலாற்றுப் பெருமையாக அமைந்திருக்கிறது.

சமூகச் சீர்திருத்தப் போராட்டங்களில் இதுபோன்ற ஒருங்கிணைப்புகள் இருந்தால்தான் வெற்றி பெற முடியும் என்பதற்கு மாபெரும் எடுத்துக்காட்டு வைக்கம் போராட்டம். 100 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட, இப்போது சமூகரீதியாகவும், அரசியல்வழியிலும், பொருளாதாரச் சூழலிலும் முன்னேறி இருக்கிறோம். ஆனால், இவை போதாது. இன்னும் நாம் முன்னேறிப் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது.

உயர்ந்த சாதி – தாழ்த்தப்பட்ட சாதி, ஏழை – பணக்காரன், ஆண் – பெண் ஆகிய பாகுபாடுகளுக்கு எதிரான நம்முடைய போராட்டத்தை நாம் தொடர வேண்டும். முன்பு இருந்ததை விட வேகமாக செயல்பட வேண்டும். நவீன வளர்ச்சியால் இந்த பாகுபாடுகளை முழுமையாக நீக்க முடியவில்லை. அதற்கு மனதளவில் மக்கள் மாற வேண்டியது அவசியம். அனைத்தையும் சட்டம் போட்டு மட்டுமே தடுக்க முடியாது. சட்டம் தேவைதான், அதைவிட மனமாற்றமும் நிச்சயம் முக்கியம். யாரையும் தாழ்த்தி பார்க்காத சமத்துவ எண்ணம் மக்களின் மனதில் வளர வேண்டும்." – என்றார்.







# ஆழ்துளை கிணற்றில் விழுந்த 5 வயது சிறுவன் 55 மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் மீட்பு

ராஜஸ்தானில் 150 அடி ஆள்துளை கிணற்றில் சிக்கிய 5 வயது சிறுவன் 55 மணி போராட்டத்துக்குப் பின்னர் மீட்கப்பட்டுள்ளார்.

ராஜஸ்தானின் தவுசா மாவட்டம் காளிகாத் என்ற கிராமத்தில் ஆர்யன் என்ற 5 வயது சிறுவன் கடந்த திங்கள் கிழமை மாலை தனது நண்பர்களுடன் வயலில் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். அப்போது அங்கு கைவிடப்பட்ட ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்துள்ளார்.

இதையடுத்து மாலை 4 மணியவில் அங்கு மீட்புப் பணிகள் தொடங்கின. சிறுவன் 150 அடி ஆழத்தில் சிக்கியிருப்பது தெரியவந்தது. புல்டோர் மற்றும் டிராக்டர்களை பயன்படுத்தி அந்த துளைக்கு அருகில் மீட்புக் குழுவினர் சுரங்கம் தோண்டத் தொடங்கினர். மேலும் கயிறு மற்றும் பிற சாதனங்களை பயன்படுத்தி சிறுவனை மீட்க முயன்றனர்.

உத்தராகண்ட் மாநிலத்தில் கடந்த 2023 இல் ஆழ்துளை கிணற்றில் விழுந்த ஒரு குழந்தை குடை தொழில்நுட்பம் மூலம் மீட்கப்பட்டது. அந்த தொழில்நுட்பமும் இங்கு பயன்படுத்தப்பட்டது. சிறுவனுக்காக ஒரு குழாய் மூலம் ஒக்சிஜன் செலுத்தப்பட்டது. கமரா மூலம் சிறுவனின் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

இந்த நிலையில் சுமார் 55 மணி நேர போராட்டத்துக்கு சிறுவன் ஆர்யன் ஆள்துளை கிணற்றிலிருந்து மீட்கப்பட்டார். மயக்க நிலையில் இருந்த அந்த சிறுவன் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்து பேசிய ராஜஸ்தான் அமைச்சர் கிரோடி லால் மீனா தெரிவிக்கையில், “நாடு முழுவதும் இது போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆழ்துளை கிணற்றை மூடுவது தொடர்பாக அரசின் உத்தரவு உள்ளதே தவிர, அது தொடர்பாக சட்டம் இல்லை. எனவே இது தொடர்பாக சட்டம் இயற்றப்பட வேண்டும்.” – என்றார்.





# காசாவில் உணவின்றி தவிக்கின்றனர் மக்கள்

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள காசா மக்கள் உணவின்றித் தவித்து வருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நாடுகள் அளித்த உணவு பொருள்கள் ஏற்றப்பட்ட லொறிகள் காசாவுக்குள் செல்ல இஸ்ரேல் பாதுகாப்புப்படை அனுமதி மறுத்துள்ளது.

இதனால், சர்வதேச அமைப்புகள் உணவு பொருள் விநியோகிப்பதை நிறுத்தி விட்டதால் பாலஸ்தீன மக்களின் முக்கிய உணவு ஆதாரமான சப்பாத்தி மாவுக்கு காசா முழுவதும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் மா இருப்பு இல்லாததால் சப்பாத்தி விற்பனை செய்யும் கடைகளை ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கானோர் முற்றுகையிடுகின்றனர். இதனால் கூட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உயிரிழப்பதும் காசாவில் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் பசியுடன் கால்கடுக்க வரிசையில் காத்திருந்த பலர் வெறும் கையுடன் வீடு திரும்பும் அவலமும் காசாவில் அரங்கேறி வருகிறது.

மா தட்டுப்பாடு எதிரொலியாக காசாவில் உணவு பண்டங்களின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ள நிலையில், செய்வதறியாமல் புலம் பெயர்ந்த பாலஸ்தீன மக்கள் பெரும் தவிப்பிற்கு ஆளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# ஹபீஸ் அல் – அசாட்டின் கல்லறையை தீ வைத்து அழித்தனர் கிளர்ச்சியாளர்கள்

சிரியாவின் முன்னாள் ஜனாதிபதியும் ஆட்சி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி பஷர் அல் – அஷாட்டின் தந்தையுமான ஹபீஸ் அல் – அசாட்டின் கல்லறையைக் கிளர்ச்சியாளர்கள் தீ வைத்து அழித்துள்ளனர்.

54 ஆண்டு கால ஆட்சியைக் கவிழ்ந்துள்ள கிளர்ச்சியாளர்கள், முன்னாள் ஜனாதிபதியின் சொந்த ஊரில் உள்ள கல்லறையையே இவ்வாறு அழித்துள்ளனர்.

அதேநேரம், ஆட்சி கவிழ்க்கப்பட்ட சிரியாவின் முன்னாள் ஜனாதிபதி பஷர் அல் – அஷாட், ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார்.

ரஷ்யாவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் இதனை ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் சிரியாவில் உள்ள பல ஆயுத களஞ்சிய சாலைகளை இலக்கு வைத்து வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.













# சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன் சிரிய கிளர்ச்சி படையினர் அறிவிப்பு

சிரியாவின் முன்னாள் ஜனாதிபதி பஷர் அல்–அசாடினால் நடத்திச் செல்லப்பட்ட சிறைச்சாலைகளை மூடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சிறைச்சாலைகளில் கைதிகளைக் கொலை செய்தல் அல்லது சித்திரவதை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சிரிய கிளர்ச்சி படை தெரிவித்துள்ளது.

அபு முகமது அல்–ஜோலானி என அழைக்கப்படும் கிளர்ச்சிப்படைத் தலைவரின் அறிக்கையினை மேற்கோள்காட்டி வெளிநாட்டு ஊடகங்கள் இந்த செய்தியினை வெளியிட்டுள்ளன.

சிரிய தலைநகர் டமஸ்கஸ்ஸில் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட கடுமையான தாக்குதல் காரணமாக அரசாங்க படைகள் அங்கிருந்து வெளியேறின.


அத்துடன், சிரிய ஜனாதிபதி பஷர் அல்–அசாட்டும் டமஸ்கஸை விட்டு வெளியேறி ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்த நிலையில், மனித வதை முகாம் என்று குறிப்பிடப்படும் சைட்னயா சிறைச்சாலையில் இருந்து ஆயிரக் கணக்கான கைதிகள் கிளர்ச்சியாளர்களினால் விடுவிக் கப்பட்டனர்.

அதேநேரம், பஷர் அல்–அசாட்டினால் நடத்திச்செல்லப்பட்ட சிறைச்சாலைகளில் சுமார் 60,000 கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர் என பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.







### பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட

# அசாத் சாலியின் கைதின் மூலம் அவரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு; 75 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க உத்தரவு



(எம்.எவ்.எம்.பஸீர்)

கொழும்பில் 2021 ஆம் ஆண்டு தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் ஊடாக இனங்களுக்கு இடையே முரண்பாட்டை தோற்றுவித்தார் எனத் தெரிவித்து மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை அவரது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றில் அசாத் சாலி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதான தீர்ப்பை நேற்று உயர் நீதிமன்றம் அறிவித்தது.

அதன்படி, குறித்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த அப்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அப்போதைய பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஷாந்த டி சொய்சா மற்றும் அதன் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயந்த பயாகல ஆகியோர் அடிப்படை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி மனுவின் பிரதிவாதிகள் தன்னிச்சையாக நடந்து கொண்டு மனுதாரருக்கு ஏற்படுத்திய சேதத்திற்காக, அசாத் சாலிக்கு அரசு 75 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர் காமினி அமரசேகர மற்றும் நீதியரசர் மஹிந்த சமயவர்தன ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் அசாத் சாலி சார்பில், தன்னையே மனுதாரராக பெயரிட்டு, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மரணமடைந்தமையைத் தொடர்ந்து வழக்கை முன் கொண்டு செல்ல பிறிதொரு சட்டத்தரணியை பெயரிட்டு தேவையான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அதன் பின்னர் இவ்வழக்கின் நிலையான சட்டத்தரணியாக தர்மஜா தர்மராஜா செயற்பட்டு வந்தார்.

சட்ட மா அதிபர், அப்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, சி.ஐ.டி. பணிப்பாளர், சி.ஐ.டி.யின் விஷேட விசாரணைப் பிரிவு இலக்கம் – 1 இன் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயந்த பயாகல, அப்போதைய சி.ஐ.டி. பணிப்பாலர் நிஷாந்த சொய்ஸா,அப்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அந்த அமைச்சின் செயலர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரால் ஜகத் அல்விஸ் ஆகியோர் இம்மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு தொடர்பில் மனுதாரரான அசாத் சாலி சார்பில் சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் உள்ளிட்டோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மன்றில் ஆஜராகி வாதங்களை முன் வைத்திருந்தார்.

சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் மன்றில் ஆஜராகி பிரதிவாதிகளுக்காக விடயங்கலை முன் வைத்திருந்த்தார்.

இவ்வழக்கின் விசாரணைகள் கடந்த செப்டம்பர் 2 ஆம் திகதி நிறைவடைந்த நிலையிலேயே நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில், ஊடக சந்திப்பொன்றினை நடாத்தி மத, இன பேதங்களை தோற்றுவிக்கும், வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாக கூறி தனது சேவை பெறுநரை சி.ஐ.டி. அந்த ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி கைது செய்ததாக மனுவின் விசாரணைகளின் போது ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட குறித்த கைது நடவடிக்கை, 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை சட்டத்தின் 6 ஆவது பிரிவை மீறும் வகையில் அமைந்திருந்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா வாதிட்டார்.

முஸ்லிம் தனியார் சட்டம், மலை நாட்டு சட்டம், தேச வழமை சட்டம் உள்ளிட்ட தனித்துவமான தரப்புகள் தொடர்பான சட்டங்கள் குறித்து தனது சேவை பெறுநரால் குறித்த ஊடக சந்திப்பில் கருத்து கூறப்பட்டதாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா சுட்டிக்காட்டியிருந்தார். அதன்படி நாட்டில் அமுலில் உள்ள தனித்துவமான தரப்புகள் தொடர்பான சட்டங்கள் குறித்து கருத்து கூறுவது எப்படி சட்ட விரோதமான செயலாகும் என அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறான நிலையில், சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான அப்போதைய பிரதி சொலிசிட்டர் ஜெனரால் தற்போது மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ், இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இரு பிக்குமார் முன் வைத்த எழுத்து மூல முறைப்பாட்டுக்கு அமைவாகவே மனுதாரர் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன எனக் கூறியிருந்த்தார்.

அந்த விசாரணைகளில் 53 பேரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரேயே, மனுதாரர் கைது செய்யப்பட்டார் எனவும் அவர் குறிப்பிட்டிருந்த்தார்.

சர்ச்சைக்குரிய ஊடக சந்திப்பு மற்றும் மாவனெல்லை புத்தர் சிலை தகர்ப்பு விவகாரம் ஆகியன தொடர்பிலான விசாரணைகளுக்காக மனுதாரரை கைது செய்ததாகவும், புத்தர் சிலை தகர்ப்பு அல்லது உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் மனுதரருக்கு தொடர்புள்ளதாக எந்த சாட்சிகளும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்படவில்லை எனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் கூறியிருந்தார்.

அதன் பின்னர், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டதாகக் கூறி, சட்டமா அதிபர் தமக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மே மாதத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார் என்ச்வும், அந்த விசாரணையின் முடிவில் மேல் நீதிமன்றம் தன்னை விடுதலை செய்ததாகவும் அசாத் சாலி, உயர் நீதிமன்ற விசாரணைகளின் ஆவணங்கள் ஊடாக உறுதிப்படுத்தியிருந்தார்.

அதன்படி நியாயமான காரணமின்றி தம்மை கைது செய்து தடுத்து வைத்ததன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு அசாத் சாலி இம் மனு ஊடக கோரியிருந்தார்.

அசாத் சாலியின் கருத்துக்களால் மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தீர்ப்பை அறிவித்த நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

மனுதாரரை தடுத்து வைப்பதற்காக தடுப்புக் காவல் உத்தர்வை பெற்றுக்கொள்ளும் போது, பிரதிவாதிகள் தீங்கிழைக்கும் வகையில் செயற்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளுக்கும் முரணாக செயற்பட்டு அதனைப் பெற்றுக்கொண்டனர் எனவும் நீதியரசர் பிரியந்த குறிப்பிட்டார்.

மனுதாரரை கைது செய்து தடுத்து வைப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவை எவ்வாறு பெற்றனர் என்பதை பிரதிவாதிகள் நீதிமன்றில் நியாயப்படுத்த தவறினர் எனத் தீர்ப்பில் சுட்டிக்காட்டிய நீதியரசர், அதன்படி அசாத் சாலியை கைது செய்தமை, தடுத்து வைத்தமை ஊடாக அரசமைப்பு ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ள அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என அறிவித்தார்.

# தேசிய கீதத்தை தமிழிலும் பாட இடம் அளிக்கும்படி கோரிக்கை

## சர்வதேச இந்து மதபீட செயலாளர் பாபு சர்மா வேண்டுகோள்

இலங்கை நாட்டை இனவாதமற்ற நாடாக மாற்றும் முயற்சியின் ஆரம்பமாக தேசிய கீதத்தை தமிழில் பாட இடம் அளிக்கவும் என சர்வதேச இந்து மதபீட செயலாளரும் முன்னாள் தேசிய நல்லிணக்க அமைச்சின் இணைப்பாளருமான பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதமர் ஹறிணி அமர சூரிய மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால ஆகியோர் இனவாதம் அற்ற, மதவாதம் அற்ற – தேசிய ஒருமைப்பாடு கொண்ட – நாடாக இலங்கையைக் கட்டி எழுப்புவதில் உறுதி பூண்டுள்ளமை வரவேற்கத்தக்கது. அதேவேளை இந்த இனங்களுக்கு இடையில் நல்லுறவை பேணும் ஆக்கபூர்வமான, உளபூர்வமான யதார்த்தமான நடவடிக்கையை அரசு முன்னெடுக்குமேயானால் நிச்சயம் அனைத்து இன மக்களும் பூரண ஆதரவு அளிப்பார்கள். அதேவேளை இந்த இலங்கை நாடும் சிங்கப்பூர் போன்று ஒரு நல்லிணக்க வாழ்வை காட்டும் உதாரணமான நாடாக நிச்சயம் உலகிற்கு அமையும் என்பதில் ஐயமில்லை.

அதே வேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும் அனுமதிக்கப்பட்டது. தமிழில் விருப்பம் காட்டவில்லை. தமிழில் பாடுவதற்கு அவர்கள் தடை விதித்திருந்தார்கள். அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசின் போது இலங்கையின் சுதந்திர தின விழாவின் போது சிங்கள மொழிகளிலும் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்பெற்றது. இதனை அனைத்து மக்களும் வரவேற்றார்கள்.

பின்னர் காலப்போக்கில் மைத்திரி அரசிலும் அந்த தமிழ் தேசிய கீதம் தொடராமல் கைவிடப்பட்டது. அதன் பின்னர் வந்த கோட்டபாய அரசிலும், ரணில் அரசிலும் தேசிய கீதம் சிங்கள மொழியிலேயே கொண்டு செல்லப்பட்டது.

எனவே இதை ஓர் ஆரம்பக் கட்டமாகக் கொண்டு, அனைத்து இன மக்களையும் ஒன்று சேர்க்கும் வண்ணம் – ஒரு தாய் மக்களாக அந்த உணர்வை ஏற்படுத்தும் வண்ணம் – தேசிய கீதத்தை சிங்கள மொழியில் பாடப்படுவது போன்று தமிழிலும் அரச நிகழ்வுகளில் பாடப் பெறுவதற்கு இந்த அநுர அரசு நடவடிக்கை எடுக்குமாக இருந்தால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கூற்று நிச்சயமாக நிதர்சனமாக்குவதற்கு ஆரம்ப அத்திவாரமாக அது அமையும் என்பதில் ஐயமில்லை. – என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கடற்றொழில் அமைச்சருடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான மனிதாபிமான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் குறித்து வலியுறுத்தப்பட்டதாக அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள மீனவர்களை விரைவில் விடுவிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், வட மாகாண மக்களுக்கான இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பு தொடர்பிலும் மீன்பிடித் துறையின் அபிவிருத்தி உதவித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.









# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றிரவு தீப்பந்தம் ஏந்திப் போராட்டத்தில்

(பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான்)

தமது அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்தி தருமாறு கோரியும் இட நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தியுன் அம்பாறை மாவட்டம் ஒலுவில் தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தீப்பந்தம் ஏந்தியவாறு தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்றிலில் நேற்று இரவு 7.30 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 300 மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக் கழக ஒலுவில் வளாக பிரதான வீதிக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, பின்னர் வளாகத்தினுள் தீப்பந்தம் ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர்.

“போலித் தீர்வுகள் வேண்டாம்“, “விடுதி வசதிகளை விரிவுபடுத்து!” ,“தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழகத்தினுள் உடனடியாக அழைக்கவும்!”, “மாணவர்களைத் துன்புறுத்தாதே!“, “மணவர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்து!” போன்ற சுலோகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






# வன்முறைகளுக்கு இலக்காகும் பெண்கள் அவற்றை வெளிப்படுத்த முன்வர வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை

(த.சுபேசன்)

பால்நிலை சார்ந்த வன்முறைகளுக்கு இலக்காகும் பெண்கள் அதனை வெளிப்படுத்த முன்வர வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணசபையில் இடம்பெற்ற பால்நிலை சார்ந்த வன்முறைகளுக்கு எதிரான நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

நாம் பணி புரிய ஆரம்பித்த 1991ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக எமக்குத் தெரியாது. அன்று வித்தியாசமான ஓர் சூழல் இருந்தது. பயம் காரணமாக கூட இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருந்திருக்கலாம்.

அதன் பின்னர் நான் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த போது அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இடம்பெறுகின்ற பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

இவ்வாறு நாம் நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்கும் போது பல பெண்கள் சமூகப் பிரச்சினை காரணமாக பிரச்சினைகளை அடுத்த கட்டத்திற்குச் கொண்டு செல்ல பின்னடிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் முன்வரும் பட்சத்தில்தான் எதிர்காலத்தில் பெண்களுக்கு எதிரான பால்நிலை சார்ந்த பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த இயலும்.

தற்போது பால்நிலை சார்ந்த வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. போதைப்பொருள் பாவனை மற்றும் மதுப்பாவனை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

சிறுமிகளுக்கு எதிராக நிகழும் வன்முறைகளை நாம் தினமும் பத்திரிகைகள் வாயிலாக அவதானிக்க முடிகிறது.

வெளிக்கொண்டு வரப்படாத வன்முறைச் சம்பவங்கள் அதிகம் காணப்படுகின்றன.



சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளில் தாய்மார்கள் சம்பந்தப்படும் சம்பவங்களும் அதிகம் பதிவாகின்றன. பெரும்பாலும் தாயின் இரண்டாவது கணவனால் பெண் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

மிருகங்கள் கூட செய்யாத சம்பவங்களை எமது மனிதர்கள் செய்கின்றனர்.

தற்போது அரச திணைக்களங்களில் 60சதவீதமானவர்கள் பெண்களாக உள்ளமையால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறும் சாத்தியங்கள் குறைவாக உள்ளன.

அவ்வாறு ஏதாவது பால்நிலை சார்ந்த வன்முறைகள் இடம்பெற்றால் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

பால் நிலை சார்ந்த வன்முறைகளை தடுக்கும் செயற்திட்டம் 16 நாள் செயற்பாட்டின் ஊடாக வருடத்தில் 16 நாள்கள் மாத்திரம் இடம்பெறுவதாக அல்லாமல் வருடம் முழுவதும் இடம்பெற வேண்டும். பால்நிலை சார்ந்த வன்முறைகளைத் தடுப்பதில் அனைவரதும் பங்களிப்பு இருக்க வேண்டும். – என மேலும் அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

# ஆசிய பளுதூக்கல் போட்டியில் யாழ் இளைஞன் மூன்றாம் இடம்




(த.சுபேசன்)

உஸ்பெகிஸ்தானில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட ச.புசாந்தன் மொத்தமாக 830கிலோகிராம் எடையைத் தூக்கி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம்-சாவகச்சேரியைச் சேர்ந்த 29வயதான சற்குணராசா புசாந்தன் இதற்கு முன்னரும் பல சர்வதேச மற்றும் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு பல சாதனைகளை நிலைநாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஆதரவு: இலங்கைக்கான தென் கொரிய தூதர் உறுதி

தென் கொரியா – இலங்கை இடையிலான நீண்டகால உறவு பேணப்பட்டு இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தென் கொரியா ஆதரவளிக்கும் என இலங்கைக்கான தென் கொரியத் தூதுவர் மியோன் லீ தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அசோக ரன்வல்ல – தென்கொரிய தூதுவர் இடையே நாடாளுமன்ற வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பில் புதிய அரசாங்கத்துடன் கலந்துரையாடி அவற்றை துரிதப்படுத்தும் நடவடிக்கை மற்றும் கண்டி சுரங்கப்பாதை திட்டம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை – தென் கொரியா இடையிலான உறவை தொடர்ந்தும் வலுப்படுத்த தாம் எதிர்பார்த்துள்ளதாக சபாநாயகர் அசோக ரன்வல்ல இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீரவும் பிரசன்னமாகியிருந்தார்.













# அடுத்த 36 மணித்தியாலங்களுக்கு பல இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் வலுவிழந்து வருவதால், அடுத்த 36 மணித்தியாலங்களுக்கு வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் அவ்வப்போது கனமழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை எதிர்வு கூறியது.

அத்துடன், ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணம், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் இன்று காலை மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# இந்தியாவிலிருந்து நேற்று மாலை வரை 1,900 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி



அரிசி இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியதையடுத்து, நேற்று மாலை வரை இந்தியாவிலிருந்து தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 1,900 மெற்றிக் தொன் அரிசி கொழும்பு துறைமுகத்தில் தரையிறப்பட்டுள்ளதாகச் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரிசி தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில், கடந்த 4 ஆம் திகதி முதல் அரிசி இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியதை அடுத்து தற்போது நாட்டிற்கு அரிசி இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது.

அதற்கமைய, எதிர்வரும் 20 ஆம் திகதிவரை இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தனியார் துறையினருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, தரையிறக்கப்பட்டுள்ள அரிசி தொகையை சுங்கத்திலிருந்து வெளியேற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பின்னணியில், பாரிய ஆலைகளில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இறுதிவரை தேவையான நெல் கையிருப்பில் உள்ளதாகத் தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நிபுண ஆலையில் 198,000 மெற்றிக் தொன்னும், ரத்ன ஆலையில் 223,000 தொன்னும் அரலிய ஆலையில் 248,000 மெற்றிக் தொன்னும் நெல் கையிருப்பில் உள்ளது.

இவ்வாறாக, பாரிய மற்றும் நடுத்த ஆலை உரிமையாளர்கள் வசம் மொத்தமாக 15 லட்சத்து 50,000 மெட்ரிக் தொன் நெல் கையிருப்பில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த நெல் கையிருப்பைக் கொண்டு ஏப்ரல் மாதம் இறுதிவரையில் தேவையான அரிசியைப் பெறமுடியும் எனவும் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையில்லை என்றும் தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -13.12.2024




இன்று உங்கள் முயற்சிகளை தைரியமாக மேற்கொள்ள வேண்டும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் மனதில் உள்ள கவலைகளை எதிர்கொண்டு வெற்றி காண முடியும்.

இன்று நேரத்துடன் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். என்றாலும் திட்டமிடுவதன் மூலம் பணிகளை சமூகமாக ஆற்ற இயலும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வீண்டும். கவனமற்ற வார்த்தைகள் உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும்.

வீணான செலவுகள் காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அதன் மூலம் நஷ்டத்தை தவிர்க்கலாம்.

தூக்கமின்மை காரணமாக சில பிரச்சினைகள் ஏற்படும். கால் வலியால் நீங்கள் பாதிக்கப்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும். உங்கள் இலக்குகளை நிறைவேற்ற பாடுபடுவீர்கள்.

உங்களின் அபாரமான செயல் திறன் பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற்றுத் தரும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மனம் திறந்து கூறுவீர்கள். இதனால் இருவருக்கு மிடையே நல்லுறவு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். பணம் நிறைந்து காணப்படும்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. உங்களிடம் காணப்படும் உற்சாகம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைப்பதற்கு சாதகமான நாள். உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமை மூலம் வெற்றி காண்பீர்கள். நம்பிக்கை உணர்வின் காரணமாக மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

மிதுனம் வேலை / தொழில்:

1 2 3 4 5இன்று குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். வேலை தொடர்பான பயணத்திற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலைதூரத்திலிருந்து கிடைக்கும் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன நிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் முயற்சிகள் வெற்றியடைய சாதகமான நாளாக இருக்காது. என்றாலும் திடமான போக்குடன் கடினமாக உழைத்தால் வெற்றி பெற இயலும்.

பணிகளைக் கையாளும் போது பொறுமை தேவை. முறையாக திட்டமிட்டால் இன்றைய இறுக்கமான பணிகளை திறமையாக கையாள முடியும்.

உங்கள் மனதில் குழப்பங்கள் காணப்படும். அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

மன உளைச்சல் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். அமைதியாக இருந்து நல்ல ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று சில பிரச்சினைகள் காணப்படும். அவற்றை நீங்கள் சாமார்த்தியமாக கையாள வேண்டும். விவேகமாக நடந்து கொள்ள வேண்டும். பிறருடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையாகப் பழக வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான உறவு பாதிக்கும். உங்கள் துணையிடம் பொறுமையை கடைபிடிப்பது சிறந்தது.

இன்று நிதிநிலைமையில் கட்டுப்பாடுகள் காணப்படும். உங்கள் பணத்தை திட்டமிட்டு கையாள வேண்டும். தேவையற்ற செலவுகள் வருத்தத்தை ஏற்படுத்தும்.

சளி அல்லது இருமலால் பாதிப்பு ஏற்படலாம். குளிர்ச்சியான உணவுகளை தவிர்த்தல் நல்லது.




இன்று உங்கள் திறமைகளை நிரூபிக்கும் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.இன்று பிரகாசமான வாய்ப்புகள் காணப்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

உங்களின் சிறப்பான செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

நேர்மை மற்றும் ஒட்டி உறவாடுவதன் மூலம் அன்பு பிணைப்பை வளர்க்க முடியும். முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று புதிய பயனுள்ள முதலீடுகளை செய்வீர்கள். உங்களிடம் அதிக பணம் காணப்படும். பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். பொறுமை அவசியம். அமைதியாக இருபதன் மூலம் உணர்ச்சிப்பூர்வமான சூழ்நிலைகளை சமாளிக்க இயலும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது.பணியில் பதட்டம் காணப்படும். இதனால் கவலை ஏற்படும்.

சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. உங்களின் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

கால் வலி மற்றும் பல் வலி ஏற்படலாம். சரியான மருத்துவ சிகிச்சை மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




உங்கள் இலக்குகளில் வெற்றி பெற பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் செயல்களில் வேகத்தை தவிர்க்கவும். உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம்.

பணிகள் அதிகமாக காணப்படும். ஒத்துழைப்பு தராத சக பணியாளர்களால் தூண்டப்பட்டு கோபமடைவீர்கள்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். சிறந்த புரிந்துணர்வுக்கு உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவினங்களால் கவலை ஏற்படும்.

குறைந்த ஆற்றலும் ஆரோக்கியமும் இன்று காணப்படும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருக்க முயலவும்.

# இன்றைய ராசி பலன்கள் -13.12.2024




இன்று நீங்கள் சிறிய மற்றும் பெரிய பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்களால் முடிந்த அளவு முயற்சி மேற்கொள்ளுங்கள். நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருங்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றத்தை அளிக்காது. முறையாக திட்டமிட்டு பணிகளை கையாள வேண்டும்.

நீங்கள் எளிதான விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். போதிய பணம் இல்லாத காரணத்தினால் அதிகரிக்கும் செலவுகள் மற்றோம் பொறுப்புகளை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

ஒவ்வாமை காரணமாக சளி அல்லது இருமல் ஏற்படலாம். எனவே குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று சிறப்பான சூழ்நிலைகள் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் செயல் பட்டு கடினப் பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள்.

உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க லேசான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் நம்பிக்கை வரும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

பூர்வீகச் சொத்து வகையில் இன்று பண வரவு காணப்படும். கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். இதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் ஆரோக்கியமான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சற்று கடினமான நாள். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும். ஆன்மீக யாத்திரை அல்லது புனித யாத்திரை ஆறுதலை அளிக்கும்.

நீங்கள் மேற்கொள்ளும் பணியில் அதிருப்தியும் அசௌகரியமும் காணப்படும். உங்கள் செயல்திறனில் கவனம் செலுத்துங்கள். சகபணியாளர்களின் பொறாமைக்கு ஆளாவீர்கள்.

நல்ல புரிந்துணர்வு இல்லாத காரணத்தினால் தகவல் தொடர்பு பிரச்சினைகள் காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிதிநிலைமை இன்று ஏமாற்றகரமாக இருக்கும். நிதி சம்பந்தமான முடிவுகள் இன்று எதிர் விளைவை ஏற்படுத்தும் என்பதால் அதனை தவிர்க்க வேண்டும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

தோள் வலி மற்றும் செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். இன்று தேவையான மனஉறுதியும் காணப்படாது.





